DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 933 of 2025 |
| Deposition of witness for | : | PW4 |
| Name | : | லோகநாதன் |
| Father's Name | : | கோவிந்தன் |
| Village | : | கிருஷ்ணகிரி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | மருந்து விற்பனையாளர் |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 15th day of April 2026.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது கிருஷ்ணகிரி திருமலை நகரில் குடியிருந்து வருகிறேன். கோழி கம்பெனியில் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். 2016 ஆம் வருடம் விபத்து ஏற்படும் போது நான் ஐஸ்வர்யா சிக்கன் கடையில் சூப்பர்வைசராக வேலை பார்த்து வந்தேன். ஆஜர் எதிரி எங்கள் கம்பெனியில் டிரைவராக வேலை பார்த்து வந்தார். சாப்பிடுவதற்காக வாகனத்தை நிறுத்தி உள்ளார். மீண்டும் வாகனத்தை எடுக்கும்போது, பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் வண்டியில் வந்து விழுந்து விபத்து ஏற்பட்டதாக எங்கள் அலுவலகத்தில் சொன்னார்கள். நான் கிருஷ்ணகிரி, அரசு மருத்துவமனைக்கு போய் பார்த்தேன். அங்கு அந்த பெண்மணி இறந்து விட்டதாக சொன்னார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் நந்தகுமார், மதுசூதனன், மெய்ஞானம் ஆகியோர் ஒரே கம்பெனியில் விபத்து சமயத்தில் வேலை பார்த்து வந்தோம் என்றால் சரிதான். யார் யார் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் நான்

போனேன், அலுவலகத்தில் இருந்து வந்தார்கள், யார் என்று தற்போது சரியாக ஞாபகம் இல்லை. விபத்து நடந்த மறுநாள் காலை 11.00 மணியளவில் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். சாட்சி கையெழுத்து போட அலுவலகத்தில் மேனேஜர் சொல்லி நான் போனேன். என்னுடன் மெய்ஞானம் மற்றும் அலுவலக பணியாளர்கள் வந்தார்கள். நான் மகாராஜா கடை காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேன். எல்லோரும் அங்கு தான் கையெழுத்து போட்டோமா என்றால் ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் மற்றொரு நாள் மதியம் 02.00 மணியளவில் கையெழுத்து போட்டேன். விளக்கம் ஏதாவது சொன்னார்களா என்றால் இல்லை, கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். ஒரு கையெழுத்து போட்டேன். விபத்து சம்பந்தமான விவரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்காகவும் எங்கள் கம்பெனியின் உரிமையாளர் சொன்னதற்காகவும் தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். மற்றபடி வேறு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 933 of 2025 |
| Deposition of witness for | : | PW5 |
| Name | : | ரவி |
| Father's Name | : | மணி |
| Village | : | பெரிய மோட்டுர் |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கோழிகடை |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the $15^{th}$ day of April 2026.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது பெரிய மோட்டுர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோழிக்கடை வைத்துள்ளேன். கடைகளுக்கு சப்ளையும் செய்து வருகிறேன். சுமார் 10 வருடத்திற்கு முன்பு நானும், ஆறுமுகம் என்பவரும் கோழிக்கடை சம்பந்தமாக பர்கூரில் இருந்து கிருஷ்ணகிரி வந்து கொண்டிருந்த போது, தேவராஜ் திருமண மண்டபம் எதிரில் போலீசார் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணிற்கு விபத்து ஏற்பட்டது சம்பந்தமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தில் போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தனர். மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும், ஆறுமுகம் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

ஆறுமுகமும், நானும் சொந்தக்காரரா என்றால் இல்லை, அவர் கோழிக்கம்பெனியில் சூப்பர் வைசராக இருக்கிறார். கடைக்கு கலெக்சன் வாங்குவதற்காக கிருஷ்ணகிரியில் இருந்து பர்கூர் நோக்கி சென்று கொண்டிருந்தோம். ஆறுமுகம் என்பவருக்கு போலீசாரிடம் நல்ல பழக்கத்தில் இருப்பார் என்றால் அது தெரியாது. காலை சுமார் 07.00–08.00 மணியளவில் போலீசார் எங்களை நிற்க வைத்தார். எங்கள் கம்பெனியில் வேலை செய்யும் பணியாளரின் வாகனம் எதிரில் நின்று கொண்டிருந்தது. அதை பார்த்து நாங்கள் சென்றோம். பாலம் ஏறும் இடத்தில் பாலத்திற்கு கீழ் தேவராஜ் திருமண மண்டபத்திற்கு எதிரில் கிருஷ்ணகிரி நோக்கி நின்று கொண்டிருந்தது. பாலம் முடியும் இடம் தேவராஜ் மகாலை தாண்டி எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 50 அடி தாண்டி உள்ளது. தேவராஜ் மகால் எதிரில் பாலம் ஏறும் இடம் இல்லை என்றாலும் பாலம் தான் உள்ளது என்றால் இல்லை. வாகனம் மேம்பாலம் NH ரோட்டில் தான் நின்று கொண்டிருந்தது. பாலம் ஏறும் இடத்திலேயே போலீசார் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். அங்கு இரண்டு போலீசார் இருந்தார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கிய போலீசாரின் பெயர் மற்றும் பதவி தெரியுமா என்றால் தெரியாது. எந்த வண்டியில் வந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும், சம்பவத்தை பற்றி தெரியாமல் கையெழுத்து மட்டும் போட்டேன் என்றால் சரியல்ல. கையெழுத்து போடுவதற்கு முன்பு ஏதாவது எழுதியிருந்ததா என்றால் வரைபடம் வரைந்திருந்தார்கள். அந்த வரைபடத்தில் தான் கையெழுத்து போட்டேனா என்றால் பேப்பரில் போட்டேன். ஒரு கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் தான் வரைந்தார்கள். நான் காவல் நிலையத்தில் தான் கையெழுத்து போட்டேன் என்றால் இல்லை.

மறு விசாரணை :–

இல்லை.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.